(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 42.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2010, ஒற்றோபர் 20, புதன்கிழமை, பி. ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0269/ '10

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— துறைமுகங்கள், விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1990 தொடக்கம் 2010 வரை கொழும்புத்துறைமுகத்தில் கையாளப்பட்ட கொள்கலன் போக்குவரத்தின் அளவையும்,

(ii) கையாளப்பட்ட பொதுவான கப்பற்சரக்குகளின் அளவை அல்லது கொள்கலனில் இடப்படாத கப்பற் சரக்குகளின் அளவையும் வருடவாரியாகவும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) எஸ்.ஏ.ஜீ.ரி. (சவுத் ஏஷியா கேட்வே ரேமினல்) உடன்படிக்கை எப்போது கைச்சாத்திடப்பட்டது என்பதையும் அதனுடைய நடவடிக்கைகள் எப்போது ஆரம்பித்து வைக்கப்பட்டன என்பதையும்,

(ii) அவ்வுடன்படிக்கையின் பிரதான நிபந்தைகளையும்,

(iii) சம்பந்தப்பட்ட தரப்பினர் அந்நிபந்தனைகளைப் பூர்த்திசெய்துள்ளாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இற்றைவரையிலான கடந்த பதினைந்து வருடங்களில் எஸ்.ஏ.ஜீ.ரி. யினது நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னரும் அதன் பின்பும் கியூ.ஈ.கியூ (குயின் எலிசபெத் கே - எலிசபெத் மகாராணி இறங்குதுறை) இல் நிறைவேற்றப்பட்ட கொள்கலன்கள், மற்றும் பொதுவான கப்பற்சரக்குக் கையாளுதல் செயலாற்றுகையையும்,

(ii) கடந்து ஐந்து வருடங்களாக கியூ ஈ கியூ ஈட்டிக் கொண்ட வருமானம் மற்றும் தேறிய இலாபம் ஆகியவற்றை வருடவாரியாகவும்,

(iii) எஸ்ஏஜீரி இற்கு வழங்கப்பட்ட வரிச்சலுகைகளையும்,

(iv) வார விடுமுறை வழங்கியதால் ஏற்பட்ட வாய்ப்பு இழப்பையும்,

(v) இந்நடவடிக்கைகளினால் ஏற்படும் தேறிய இலாபம் அல்லது தேறிய நட்டத்தையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0373/ '10

2.

கௌரவ நூர்டீன் மசூர்,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 1990 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 31 ஆம் திகதியளவில் வட மாகாணத்தின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய நிருவாக மாவட்டங்களில் முஸ்லிம் மத, கலாசார அலுவல்கள் திணைக்களத்திலும் வக்பு பிரிவிலும் பதிவு செய்யப்பட்டிருந்த -

(i) முஸ்லிம் பள்ளிவசல்கள், ஜும்ஆப் பள்ளிவாசல்கள், தக்கியாக்கள், சாவியாக்கள், தர்காக்கள் ஆகிய முஸ்லிம் மத புனித தலங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) அவற்றின் பெயர்கள், முகவரிகள், பதிவிலக்கங்கள் யாவை என்பதையும்,

(iii) அந்த முஸ்லிம் பள்ளிவாசல்கள், புனித தலங்களின் சட்டபூர்வ நம்பிக்கைப் பொறுப்பாளர்களாக இலங்கை வக்பு சபையினால் அல்லது முஸ்லிம் மத, கலாசார திணைக்களத்தின் பணிப்பாளரினால் அப்போது நியமிக்கப்பட்டிருந்த நபர்களின் பெயர்கள், முகவரிகள் யாவை என்பதையும்,

(iv) அந்த ஒவ்வொரு முஸ்லிம பள்ளிவாசல்கள், புனித தலங்களுக்குச் சொந்தமானதெனக் கூறப்படும் (1956 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க முஸ்லிம் பள்ளிவசல்கள், புனித தலங்கள் அல்லது வக்பு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள) அசையா சொத்துக்கள், காணிகள் யாவை என்பதையும்,

(v) மேற்கூறிய ஒவ்வொரு வக்பு சொத்துக்கள் உள்ள இடங்களில் வரிப்பண இலக்கங்கள், முகவரிகள் யாவை என்பதையும்

மாவட்ட மட்டத்தில் அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0397/ '10

3.

கௌரவ செஹான் சேமசிங்க,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அனுராதபுரம், பொலன்னறுவை மாவட்டங்களில் 2009 ஆம் ஆண்டில் இனங் காணப்பட்ட சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) அதனை முன்னைய அண்டுடன் ஒப்பிடுகையில் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதா அல்லது குறைந்துள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ரஜரட்ட பிரதேசத்தில் சிறுநீரக நோய் பரவலாக காணப்படுவதற்கான காரணங்கள் இனங்காணப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறெனின், அவை யாவை என்பதையும்,

(iii) குறிப்பிட்ட காரணிகளை பிரதேசத்திலிருந்து நீக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள அல்லது அமுலாக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் எவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0405/ ‘10

4.

கௌரவ (டாக்டர்) ரோஹன புஷ்ப குமார,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் இதுவரை அறிக்கையிடப்பட்டுள்ள மொத்த எயிட்ஸ் நோயாளர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அவற்றில் இதுவரை உயிரிழந்த நோயாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) குருதி மாற்றுதலினூடாக எயிட்ஸ் நோய்க்கு உள்ளான நோயாளர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iv) போதைப் பொருட்களை ஊசி மூலம் உடலில் செலுத்துவதால் எயிட்ஸ் நோய்க்கு உள்ளான நோயாளர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(v) இந்நோய் ஏற்பட்ட தாயிடமிருந்து நோய் தொற்றுக்கு உள்ளான பிள்ளைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

அவர் இச்சபையில் முன்வைப்பாரா?

(ஆ) (i) சுகாதார அமைச்சினால் 2007,2008,2009 ஆம் ஆண்டுகளில் எயிட்ஸ் நோயாளர்களுக்கு சிகிச்சைக்காக செலவிடப்பட்ட மொத்த நிதி எவ்வளவு என்பதையும்,

(ii) எயிட்ஸ் நோய் பரவுவதை தடுப்பதற்காக இற்றைவரை சுகாதார அமைச்சினூடாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் எவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0414/ ‘10

5.

கௌரவ ரீ.ரஞ்சித் த சொய்சா,— அரச வளங்கள், தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான கண்டி, மெத தும்பரயில் அமைந்துள்ள ஹெயார்பாக் தோட்டத்தில் 976.75 ஹெக்ரயர் கொண்ட காணி களனி, வனவாசல புனஸ்ரா கிறீன் கார்டன் கம்பனியின் பணிப்பாளர் மஞ்சுல குணவர்தன என்பவருக்கு 2 மில்லியன் ரூபாவுக்கு குத்தகையில் விடப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) சம்பந்தப்பட்ட உடன்படிக்கைக்கு அரசின் விலை மதிப்பீட்டு அறிக்கையும், அமைச்சரவை அங்கீகாரமும் பெறப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) சம்பந்தப்பட்ட குத்தகையாளர் குத்தகை உடன்படிக்கைக்கு அமைவாக நடந்துகொண்டுள்ளாரா என்பதையும்,

(iii) அவ்வாறின்றேல் அதற்கெதிராக எடுக்கப்படும் நடவடிக்கை யாதென்பதையும்,

(iv) குத்தகையாளர் சட்டபூர்வமாக நடந்துகொண்டிருக்காவிடின் சம்பந்தப்பட்ட உடன்படிக்கையை இரத்துச் செய்து காணியை மீண்டும் அரசுக்கு பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(v) அவ்வாறு சட்டபூர்வமாக நடந்துகொண்டிருக்காவிடின் அது தொடர்பில் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் யாரென்பதையும்,

(vi) அவர்கள் தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0468/ '10

6.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எல்.ரீ.ரீ.ஈ. சர்வதேசப் பிரிவின் தலைவராக அறியப்பட்டுள்ள குமரன் பத்மநாதன் என்பவரைக் கைதுசெய்து இலங்கைக்கு அழைத்துவந்த திகதி யாதென்பதையும்,

(ii) இவருக்கு எதிராக குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளனவா என்பதையும்,

(iii) அவ்வாறாயின், அது எந்த நீதிமன்றத்தில் என்பதையும்,

(iv) இவர் தற்போது தடுத்து வைக்கப்பட்டிருப்பது சிறைச்சாலையொன்றிலா இல்லாவிடின் வேறு இடமொன்றிலா என்பதையும்,

(v) சிறைச்சாலையொன்றிலாயின், அதன் பெயர் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இவரை சமீபத்திய தினமொன்றில் வன்னிப் பிரதேசத்திற்கான விஜயமொன்றுக்கு அழைத்துச் செல்லப்பட்டதா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0605/ '10

7.

கௌரவ மொஹான் பிரியதர்ஷன த சில்வா,— அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2009 ஆம் ஆண்டில் தேசிய கட்டட ஆராய்ச்சி அமைப்பு மண்சரிவுகள் சம்பந்தமாக அரசாங்க மற்றும் தனியார் துறைகளின் ஆய்வுப் பணிகளுக்காக செலவு செய்துள்ள மொத்தத் தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி அமைப்பு மண்சரிவுகள் சம்பந்தமாக அரசாங்கத் துறையின் ஆய்வுப் பணிகளுக்காக நிதிசார் அறவீட்டினை மேற்கொள்கின்றதா என்பதையும்,

(iii) 2009 ஆம் ஆண்டில் மண்சரிவுகள் சம்பந்தமாக தனியார் துறையில் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டதன் மூலம் மேற்படி அமைப்பு ஈட்டியுள்ள மொத்த வருமானம் எவ்வளவென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மண்சரிவுகளினால் ஏற்படும் அழிவுகளை குறைப்பதற்கு அனர்த்த வலயங்கள் சம்பந்தமான தரவுகளை சேகரிக்கின்ற கருத்திட்டமொன்று செயற்படுத்தப்படுகின்றதா என்பதையும்,

(ii) ஆமெனில், அது யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0606/ '10

8.

கௌரவ ஹேமால் குணசேகர,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2009 ஆம் ஆண்டில் இந்நாட்டில் எவ்வளவு ஹெக்டயார்களில் கறுவா பயிரிடப்பட்டதென்பதையும்,

(ii) 2007, 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் தனித்தனியாக எத்தனை மெற்றிக் தொன் கறுவா ஏற்றுமதி செய்யப்பட்டது என்பதையும்,

(iii) மேற்படி ஒவ்வொரு வருடத்திலும் கறுவா ஏற்றுமதியின் மூலம் ஈட்டிய வருமானம் எவ்வளவென்பதையும்,

(iv) 2009 ஆம் ஆண்டின் உள்நாட்டு கறுவா எற்றுமதியானது உலக சந்தையில் கறுவாவுக்கான கேள்வியில் எத்தனை சதவீதம் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இந்நாட்டின் கறுவா உற்பத்திக்கு சர்வதேச மட்டத்திலான தரச் சான்றிதழ்கள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) இன்றேல், சர்வதேச தரத்திலான கறுவாவை உற்பத்தி செய்வதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0415/ '10

9.

கௌரவ ரீ.ரஞ்சித் த சொய்சா,— அரச வளங்கள், தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான வொக்ஷோல் வீதி, இலக்கம் 175 ஏ, தொகுதியில் அமைந்துள்ள 5000 சதுர அடிகள் கொண்ட களஞ்சிய சாலை, கொழும்பு 02, வொக்ஷோல் வீதி 139ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள, சமர்வில் கம்பனி எனப்படும் கம்பனிக்கு ரூபா 67,500.00 மாதாந்த வாடகைக்கு குத்தகையில் விடப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) சம்பந்தப்பட்ட குத்தகை உடன்படிக்கைக்கு அரசின் விலை மதிப்பீட்டு அறிக்கையும், அமைச்சரவை அங்கீகாரமும் பெறப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) சம்பந்தப்பட்ட குத்தகையாளர் குத்தகை உடன்படிக்கைக்கு அமைவாக நடந்துகொண்டுள்ளாரா என்பதையும்,

(iii) சட்டபூர்வமாக நடந்துகொண்டிருக்காவிடின், மேற்படி களஞ்சிய சாலையை மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கு மீண்டும் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(iv) அவ்வாறின்றேல், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0446/ '10

10.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அமைச்சுக்களின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகள் தொடர்பான வர்த்தமானி 2010, ஏப்பிறல் 30 ஆம் திகதி வெளியிடப்பட்டது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) அதைத்தொடர்ந்து, இவ்வதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகள் மாற்றப்பட்டனவா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) ஆமெனில்,

(i) அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகள் குறைக்கப்பட்டுள்ள அமைச்சுக்கள்,

(ii) அவ்வதிகாரங்கள் யாருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதென்பதையும்,

(iii) அவ்வாறான மாற்றங்களுக்கான காரணங்களையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றுள்ளவாறு அமைச்சுக்களின் அனைத்து அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகள் அடங்கிய பூரண அட்டவணையொன்றை அவர் சமர்ப்பிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0469/ '10

11.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எல்.ரீ.ரீ.ஈ. சர்வதேசப் பிரிவின் தலைவராக அறியப்பட்டுள்ள குமரன் பத்மநாதன் என்பவரால் நிர்வகிக்கப்பட்ட எல்.ரீ.ரீ.ஈ. க்கு சொந்தமான சர்வதேச சொத்துக்கள் அரசால் இனங்காணப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அச்சொத்துக்களின் அளவு எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி சொத்துக்களில் இன்றளவில் இலங்கை அரசாங்கத்தினால் அரசுடைமையாக்கப்பட்ட சொத்துக்கள் யாவையென்பதையும்,

(iv) அவ்வாறு அரசுடைமையாக்கப்படாத சொத்துக்கள் யாவையென்பதையும்,

(v) மேற்படி சொத்துக்கள் இருப்பதாக தற்போது கண்டறியப்பட்டுள்ள நாடுகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0609/ '10

12.

கௌரவ மொஹான் பிரியதர்ஷன த சில்வா,— சுதேச மருத்துவத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் சுதேச மருத்துவத் தேவை கருதி இந்நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ள மூலிகைச் செடி வகைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) குறித்த மூலிகைச் செடிகளின் இறக்குமதிக்காக மேற்படி வருடங்களில் ஏற்றுள்ள மொத்தச் செலவினம் எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அந்த மூலிகைச் செடிகளை இந்நாட்டில் பயிரிடுவதற்காக நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள வேலைத் திட்டமொன்று உள்ளதாவென்பதையும்,

(ii) அவ்வாறாயின், சம்பந்தப்பட்ட கருத்திட்டத்திற்காக இதுவரை செலவிடப் பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0416/10

13.

கௌரவ ரீ.ரஞ்சித் த சொய்சா,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள,

(i) சிறிய தேயிலைத் தோட்டங்களின் நிலப் பரப்பு யாதென்பதையும்,

(ii) சிறிய தேயிலைத் தோட்டச் சொந்தக்காரர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) வரட்சியினால் பாதிக்கப்பட்ட சிறிய தேயிலைத் தோட்டங்களின் நிலப் பரப்பு யாதென்பதையும்,

(iv) வரட்சியினால் பாதிக்கப்பட்ட சிறிய தேயிலைத் தோட்டங்களின் சொந்தக்காரர் களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) சிறிய தேயிலைத் தோட்டங்கள் அபிவிருத்தி அதிகார சபையினால் இதுவரை வரட்சியினால் பாதிக்கப்பட்ட தேயிலைத் தோட்டங்களை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,

(ii) அவ்வாறாயின், அந்த நடவடிக்கைகள் யாவையென்பதையும்,

(iii) வரட்சியினால் சிறிய தேயிலைத் தோட்டச் சொந்தக்காரர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பைக் குறைப்பதற்கு மீள் பயிர்ச்செய்கைக்காக நிவாரண உதவி வழங்கப்படுமா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0456/ '10

14.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கொழும்பு நகரிலுள்ள நடைபாதை வியாபாரிகளினது கடைகள் யாவற்றையும் உடைக்கும் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டதை அவர் அறிவாரா?

(ஆ) அவை எப்போது, ஏன் அகற்றப்பட்டன என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) தற்போது கடைகள் யாவும் பூரணமாக அகற்றப்பட்டுள்ளனவா என்பதையும்,

(ii) இன்றேல், அவற்றை அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்,

(iii) நடைபாதை வியாபரிகள் எவராயினும் தமது வியாபார நடவடிக்கையைத் தொடர்ந்து மேற்கொண்டுள்ளனர் எனின் அது சட்டபூர்வமாக்கப்பட்டுள்ளதா என்பைதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஈ) (i) அகற்றப்பட்ட நடைபாதை வியாபாரிகளின் எண்ணிக்கையையும்,

(ii) அவர்களுக்கு மாற்று இடங்கள் வழங்கப்பபட்டனவா என்பதையும்,

(iii) அவர்களுடைய பெயர்களையும் வழங்கப்பட்ட மாற்று இடங்களையும்,

(iv) கொழும்பு நகரம் தவிர்ந்த ஏனைய இடங்களிலும் இப்பிரச்சினை நிலவுகின்றதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இது ஓர் அரசியல் பழிவாங்கலாக மேற்கொள்ளப்பட்டது என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஊ) இன்றேல், ஏன்?

0470/ '10

15.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எல்.ரீ.ரீ.ஈ. உடன் நடைபெற்ற இறுதி யுத்தத்தின் போது அரச இராணுவத்தினரால், எல்.ரீ.ரீ.ஈ. வசமிருந்து எத்தனை கிலோகிராம் தங்கம் கைப்பற்றப்பட்டது என்பதையும்,

(ii) மேற்படி தங்கத்தை கண்டுபிடித்த இராணுவ உத்தியோகத்தர்கள் யாவர் என்பதையும்,

(iii) மேற்படி தங்கம் கையளிக்கப்பட்டுள்ள நீதிமன்றம் அல்லது இடம் யாதென்பதையும்,

(iv) மேற்படி தங்கத்தின் பெறுமதி ரூபாவில் எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்கள்

1.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— திரைசேரிச் செயலாளர் (பிரதிநிதியின் பெயர் குறித்த நியமனம்),— சட்டவாக்கத்தினால் தாபிக்கப்பட்ட ஏதேனும் குழுவின், அதிகாரசபையின், சபையின் அல்லது நிறுவனத்தின் உறுப்பினரொருவராக திறைசேரிச் செயலாளர் இருப்பதற்கு அத்தகைய சட்டவாக்கம் ஏற்பாடு செய்துள்ளவிடத்தான சந்தர்ப்பங்களில், திறைசேரிச் செயலாளர் அவரது பிரதிநிதியாக இருப்பதற்கென, நிதி என்னும் விடயம் குறித்தொதுக்கப்பெற்றுள்ள அமைச்சரின் அமைச்சிலிருந்து அல்லது பொதுத் திறைசேரியின் ஏதேனும் திணைக்களத்திலிருந்து ஆட்களைப் பெயர் குறித்து நியமிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

2.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— தவணை தவறிய வரிகள் (விசேட ஏற்பாடுகள்),— தவணை தவறுகையிலுள்ள வரிகளை அறவிடுவதற்கென காலத்தால் பிணிக்கப்பட்ட முறையில் சீர்வடிக்கம் செய்யப்பட்டதும் துரிதமானதுமானதொரு நடைமுறையொன்றுக்கு ஏற்பாடு செய்வதற்கும் தவணை தவறுகையிலுள்ள வரிகளை குறித்த சில சூழ்நிலைகளில் பதிவழிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; அத்துடன் அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

3.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— சூதாட்டம் (விசேட ஏற்பாடுகள்),— சூதாட்டத் தொழிலை ஆரம்பிக்க முன்னுகின்ற ஆட்கள் எந்த இடப்பரப்புகளில் தங்கள் தாபனங்களை நிறுவ முடியுமோ அந்த இடப்பரப்புக்களை பெயர் குறிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; அத்துடன் அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

4.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இலங்கைப் பகிரங்க தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு (நீக்கம்),— 1996 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, இலங்கைப் பகிரங்க தொழில்முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழுச் சட்டத்தை நீக்கம் செய்வதற்கும் 1996 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, இலங்கைப் பகிரங்க தொழில்முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழுச் சட்டத்தின் நீக்கத்தின் விளைவாந்தன்மைக்கு ஏற்பாடு செய்வதற்கும்; அத்துடன் அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

5.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தம்),— 1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சடடத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

6.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் (திருத்தம்),— 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தற் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

## பிரேரணை முன்னறிவித்தல்

7.

கௌரவ தேனுக விதானகமகே,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக:-

"ஒலகங்கல மஹா சுதர்ஷன பரோபகாரி மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1 ) ,— 06/2006 ஆம் இலக்கமும் 2006.04.25 ஆம் திகதியும் கொண்ட பொது நிர்வாக சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர் நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்கான மாதாந்த சம்பளங்கள் பின்வருமாறு அமைய வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப் பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| பிரதம நீதியரசர் | ரூ.70,000.00 |
| | ரூ. 1,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகளும் மேன்முறையீட்டு | |
| நீதிமன்றத்தின் தலைவரும் | ரூ. 65,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 63,500.00 |

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களாக 2004, செத்தெம்பர் மாதம் 09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றப்பட்ட சம்பளத்திட்டங்களுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இந்தப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 2

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்காக, சம்பளத்தின் 25% இற்குச்சமமான மாதாந்த ஆள்சார் படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108 (1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப் பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய ஆள்சார் படிகளாக பாராளுமன்றத்தினால் 1998 மாச்சு மாதம் 17 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஆள்சார் படிகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளு மன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.3),— மேலும், 2007.08.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசரும் உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவருக்கும் மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகளுக்கும் கீழ்க்காணுமாறு மாதாந்த வீட்டு வாடகைப் படிகள் செலுத்தப்பட வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இப்பாராளுமன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| பிரதம நீதியரசர் | ரூ. 27,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிபதிகளின் தலைவர் | ரூ. 25,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 22,500.00 |

மேலும், உயர் நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய வீட்டு வாடகைப் படியாக 2004, செத்தெம்பர் மாதம் 09 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட படிக்குப் பதிலாக, இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட வீட்டு வாடகைப் படி நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.4),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு, பிரதம நீதியரசருக்கு உபசரணைப் படியாக மாதாந்தம் ரூ. 3,500 படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108 (1) ஆம் உறுப்புரையின் கீழ் இப்பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும் இதற்கு முன்னர் பிரதம நீதியரசருக்காக பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட உபசரணைப் படிக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் உபசரணைப் படி நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. )

* 5.

நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சர்,— இலங்கை மகாவலி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, இலங்கை மகாவலி அதிகாரசபைச் சட்டத்தின் 3(1) ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 1981, ஏப்பிரல் மாதம்16 ஆம் திகதிய வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.10.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* 6.

நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சர்,— இலங்கை மகாவலி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1),— 1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, இலங்கை மகாவலி அதிகாரசபைச் சட்டத்தின் 3(1) ஆம் பிரிவின் கீழ் மகாவலி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2000, மே மாதம் 04 ஆம் திகதிய 1130/13 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.10.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* 7.

நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சர்,— இலங்கை மகாவலி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— 1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, இலங்கை மகாவலி அதிகாரசபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் கமத்தொழில் அபிவிருத்தி மற்றும் கமநல சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2007, மார்ச் மாதம் 06 ஆம் திகதிய 1487/16 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.10.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* 8.

நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சர்,— இலங்கை மகாவலி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 3),— 1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, இலங்கை மகாவலி அதிகாரசபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் கமத்தொழில் அபிவிருத்தி மற்றும் கமநல சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2007 மார்ச் மாதம் 09 ஆம் திகதிய 1487/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.10.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக

* 9.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள், — 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணிகள் மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஒகத்து மாதம் 24 ஆம் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 10.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால், நிதி, திட்டமிடல் அமைச்சருக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், பதில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.27 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 27

2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் பதில் நிதி, திட்டமிடல் அமைச்சர் சரத் அமுனுகம ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 21302 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "அச்சிடல், பிரசாரம் மற்றும் புத்தகங்கள் விற்பனை முற்பணக் கணக்கு—கல்வி வெளியீட்டுத் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — ரூபா 2,400,000,000 இலிருந்து ரூபா 2,162,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — ரூபா 100,000,000 இலிருந்து ரூபா 960,000,000 வரை.

(இக்கட்டளை 2009.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் : கலாநிதி சரத் அமுனுகம*
பதில் நிதி, திட்டமிடல் அமைச்சர்.

கொழும்பு 01,
2010.07.03

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 11.

சுகாதார அமைச்சர்,— இலங்கை அரச மருந்தாக்கட் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத் தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்— 2007,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2009.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2007.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான இலங்கை அரச மருந்தாக்கட் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத் தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.05.05 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 12.

சுகாதார அமைச்சர்,— விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த மருத்துவமனை வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்—2007,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2007.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த மருத்துவமனை வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.05.05 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 13.

சுகாதார அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்—2006,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2009.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2006.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.05.05 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 14.

தொழில்நுட்பவியல், ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கைக் கட்டளைகள் நிறுவனத்தின் ஆண்டறிக்கை – 2007,— 1984 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க இலங்கைக் கட்டளைகள் நிறுவனச் சட்டத்திற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2009.09.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2007 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2007 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.08.06 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 15.

தொழில்நுட்பவியல், ஆராய்ச்சி அமைச்சர்,— கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஆண்டறிக்கை - 2006,— 1994 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அபிவிருத்தி சட்டத்தின் 40 (3) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2009.08.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2006 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2006 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான கைத்தொழில் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.08.06 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 16.

தொழில்நுட்பவியல், ஆராய்ச்சி அமைச்சர்,— ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபையின் ஆண்டறிக்கை – 2006,— 2005ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபைச் சட்டத்தின் 29(5) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2009.09.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2006 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2006 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபையின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.08.06 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.